# குண்டசாலை பிரதேச சபை
# கண்டி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 23 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தியிருந்த கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 715,550 பெறுமதியான டிரக்டர் வண்டி ஒன்றின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 02 சந்தர்ப்பங்கள் ஏல விற்பனை செய்யப்பட்ட ரூபா 107,160 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ஒவ்வொரு விடயத்தினதும் கிரயத்தினை இனங்கண்டு குறிப்பிட்ட சொத்துக்களில் இருந்து அகற்றவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 10,225 இற்கான ஏல விற்பனை செய்யப்பட்ட உபகரணங்களின் கிரயத்தை இனங்கண்டு அப் பெறுமதியினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்வரும் ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 22,269 இற்கான கடை வாடகை, முற்பெறுவனவுகள் என கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நிலுவைக் கடை வாடகைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

(உ) சபைக்குச் சொந்தமான 06 குப்பை வண்டிகளில் 04 குப்பை வண்டிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த மருந்து வகை இருப்பின் பெறுமதியினைக் கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்குகளில் ரூபா 15,383 இற்கான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 38,583,215 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 543,590,000 இற்கான 79 காணித் துண்டுகளின் காணி உறுதிகள் அல்லது சாட்டுதல் கட்டளை சபையில் காணப்படவில்லை. அத்துடன் கணக்கீட்டு பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தியும் இருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) மத்திய மாகாண சபையின் நிதி விதிக் கோவை | |
| நி.பி. 351 | 04 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 76,599 தொகை பெறுமதியான 04 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திட்டமிடல் மற்றும் கட்டங்கள்) 392/9 மற்றும் 935/6 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் ஏற்பாடுகள் | i. காணித் துண்டுகள் பிரிக்கப்பட்டு 25 காணிகள் தொடர்பான வரைபுகள் அனுமதிக்காமல் அங்கீகாரம் இன்றி காணிகள் துண்டுகளாகப் பகிரப்பட்டிருந்தன.<br>ii. துண்டுகளாக பகிரப்பட்டிருந்த 06 காணிகளின் பொது வசதிகள் தொடர்பான காணித் துண்டுகளின் காணி உறுதிகள் மற்றும் சாட்டுதல் கட்டளைகள் சபைக்கு பெற்றிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 81,885,063 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,292,516 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 32,592,547 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2. வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரின் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத் தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையில் சேகரித்த வருமானம் | 2014 ஆண்டின் போது சிட்டை யிடப்பட்ட வருமான த்தில் சேகரித்த வருமானம் | | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 6,173,240 | 7,280,448 | 4,069,832 | 3,549,024 | 2,103,408 | 3,731,424 | 5,834,832 |
| ஏக்கர் வரி | 75,663 | 7,680 | 104 | 1,569 | 75,559 | 6,111 | 81,670 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| குப்பை வரி | 912,687 | 1,800,000 | 236,380 | 1,715,863 | 676,307 | 84,137 | 760,444 |
| கடை வாடகை | 848,586 | 3,211,008 | 757,623 | 2,971,467 | 90,963 | 239,541 | 330,504 |
| முச்சக்கரவண்டிக் கட்டணம் | 1,949,994 | 613,800 | 359,843 | 263,805 | 1,590,151 | 349,995 | 1,940,146 |

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 36,689,798 தொகையான மொத்த வருமானம் ஒன்று நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.2 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 6,173,240 இற்கான நிலுவை மீதியில் ரூபா 4,069,832 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், சிட்டை இடப்பட்டவைகளில் அறவீடு செய்யப்பட்டவை ரூபா 3,549,024 தொகையாக காணப்பட்டமையால், ஆண்டிற்கான நிலுவையில் இருந்து மற்றும் சிட்டை இடப்பட்டவைகளில் இருந்து சதவீதம் நூற்றிற்கு 57 ஆகக் காணப்பட்டது. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,834,832 இற்கான மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 4,760,756 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1)

ஏற்பாடுகளை கடைபிடித்து நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வீத வரி மீதி ரூபா 5,834,832 ஆக காணப்பட்டதுடன், தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீதி ரூபா 5,029,615 ஆகக் காணப்பட்டமையால், ரூபா 805,217 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2.3 குப்பை வரி

------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 912,687 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், வருட இறுதியில் அவற்றில் ரூபா 760,444 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 31 இற்கான பலவீன மட்டத்தில் காணப்பட்டதுடன், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 610,580 வும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,131,620 வும் கிடைக்க வேண்டியிருந்தது. இம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 574,873 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.2.5 ஏனைய வருமானங்கள்

----------------------------------------

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2009 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 1597/8 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், இணக்கச் சான்றிதழ் இன்றி குடியிருத்தல் அல்லது உபயோகப்படுத்தல், பயன்படுத்தல் மேற்கொள்ளப்படக் கூடாது. அத்துடன், அவ் அறிவுரைகளை மீறும் இடத்து, ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். வதியும் மற்றும் தொழில் செய்யும் 33 இடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் இன்றியே குடியிருந்ததுள்ளனர். அதற்காக ரூபா 1,479,000 இற்கான கட்டணம் மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். எனினும், அப் பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04-15 இடைப்பட்ட காலம் முதல் தேறப்படாது காணப்படும் ரூபா 274,729 பெறுமதியான வங்கி வைப்புக்கள், ரூபா 622,564 தொகை பெறுமதியான இனங்காணப்படாத 108 செலவு விடயங்கள் மற்றும் ரூபா 872,031 தொகை பெறுமதியான இனங்காணப்படாத 39 வரவு விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 23 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக எழுத்துமூல கட்டளைகள் அல்லது அறிவுரை வழங்கியிருந்த போதிலும், அவ் அறிவுரைகள் அல்லது கட்டளைகள் செயற்பட்டிருந்தனவா என்பது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்ட ரீதியாக்கும் போது அறவிடப்பட வேண்டிய அங்கீகாரமற்ற கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பொதுசன மலசலகூடம் பராமரித்தல்

சபைக்குச் சொந்தமான மெனிக்ஹின்ன நகரத்தில் பொதுசன மலசலகூடத்தின் பராமரிப்பு மற்றும் பயன்படுத்துவோரிடம் கட்டணம் அறவீடு செய்தல் கேள்வி நடைமுறை மற்றும் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் வெளி நபர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. அச் சாரார் பயன்படுத்துவோரிடம் ரூபா 5 உம் மற்றும் ரூபா 10 உம் வீதம் பணம் அறவிடப்பட்டு வந்துள்ளது. எனினும், பொதுசன மலசலகூடத்தின் பராமரிப்பு சாட்டப்பட்ட திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஏப்ரல் 20 வரை வருமானம் ஏதும் சபைக்கு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அதற்கான நீர் நுகர்வு தொடர்பாக ரூபா 141,584 சபை நிதியத்தில் இருந்து நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

ரூபா 4,862,120 தொகை பெறுமதியான நீர் உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் பெறுமதியினை இனங்காணப்பட்டிருக்காத 02 வாகனங்கள் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

(அ) சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்காக நேரடியாக ஒப்பந்தக்காரர் சாட்டுதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1988 இன் பிரதே சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி இலக்கம் 177 மற்றும் 178 இன் பிரகாரம் கேள்வி நடைமுறைகளை கடைபிடிக்கப்படாமல் சபை நிதியத்தில் இருந்து (நிர்மாண வேலைகள் உட்பட) 140 நிர்மாண வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு சாட்டப்பட்டு ரூபா 11,565,431 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2012 ஜனவரி 05 திகதிய அரச நிதிச் சுற்று நிருப இலக்கம் 01/2012 இன் பிரகாரம், சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு ஒப்பந்த வேலைகள் சாட்டுதல் மேற்கொள்ளும் போது குறிப்பிட்ட சனசமூக அடிப்படை அமைப்புக்களுக்கு 03 ஒப்பந்த வேலைகளை விட கூடுதலான ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கக் கூடாது. குண்டசாலை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு 2014 ஆண்டின் போது ரூபா 32,653,696 தொகை பெறுமதியான 81 நிர்மாண வேலைகளை ஆண்டின் போது ஒப்படைத்து ரூபா 28,772,680 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மீளளிப்பு செய்யப்படாத நிதியங்கள்

வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 18 நிர்மாண வேலைகளுக்காக பணம் மீளளிப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் மீளாய்வாண்டின் போது ரூபா 9,458,183 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த போதிலும் 2015 மே 20 திகதி வரை அப் பணத்தில் இருந்து ரூபா 7,212,217 இற்கான தொகையொன்று மேலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எஸ்.பீ. வீரக்கோன் மாவத்தை அபிவிருத்தி செய்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 1,467,035

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1:2:4(19mm) கொங்கிரீட் கலவை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் பாதையின் மேற்பரப்பின் சில இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது அவ் இடங்களில் இலேசாக கையினால் உடைக்கக் கூடிய மட்டத்தில் பலவீனமான கொங்கிரீட் கலவை ஒன்று போடப்பட்டிருந்தது. கொங்கிரீட் இரு மருங்கிலும் தேன்கூடு போன்ற வெற்றிடங்கள் (Honey Comb) காணக் கூடியதாக இருந்ததுடன் கொங்கிரீட் பாதை ஆரம்பம் முதல் இறுதி வரை பல இடங்களில் வெடிப்பு ஏற்பட்டுக் காணப்பட்டுள்ளது. மேலும், அவ் வெடிப்புக்களில் சில ½ அங்குல அளவு விசாலமானதாக காணப்பட்டது என 2015 ஏப்ரல் 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) மதிப்பீடுகளின் பிரகாரம் மற்றும் கொடுப்பனவு பில் பத்திரங்களின் பிரகாரம் பாதைப் பரப்பில் இனங்கண்ட இடங்களில் ABC கலவை போடப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ABC கலவை போடப்பட்ட இடங்களில் அளவைகள் காட்டப்பட்டிருக்காமையால், அவை போடப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

(ஈ) சன சமூக நிலையத்திற்கு அண்மையில் செல்லும் பாதை நிர்மாணித்தல் - செலவிடப்பட்ட தொகை ரூபா 689,500

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 அங்குல கனத்தில் போடப்பட வேண்டிய கொங்கிரீட் பாதை மேற்பகுதி பல இடங்களை உடைத்து பரிசோதனை மேற்கொண்ட போது அவற்றின் கனம் 3 ½ அங்குலங்கள் என அவதானிக்கப்பட்டதுடன் 1:2:4(19mm) கொங்கிரீட் கலவையை பயன்படுத்தி நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் பாதை இலேசாக கையினால் உடைக்கக் கூடிய பலவீன மட்டத்தில் கொங்கிரீட் கலவை போடப்பட்டிருந்ததென 2015 ஏப்ரல் 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது காணக் கூடியதாக இருந்தது. கொங்கிரீடின் இரு பகுதியிலும் தேன்கூடு (Honey Comb) போன்ற வெற்றிடங்கள் அமைந்திருந்தன. கொங்கிரீட் பாதை ஆரம்பித்த இடம் முதல் இறுதி வரை அனேகமான இடங்கள் வெடிப்புக்கள் ஏற்பட்டு காணப்பட்டதுடன், அவ் வெடிப்புக்களில் சில ½ அங்குல அளவில் விரிவடைந்து விசாலமான வெடிப்புக்களாக அவதானிக்கப்பட்டது.

(ii) மதிப்பீடுகளின் பிரகாரம் மற்றும் கொடுப்பனவு பில் பத்திரங்களின் பிரகாரம் பாதையின் இனங்காணப்பட்டுள்ள இடங்களில் ABC கலவை 10 கியூப்கள் போடப்பட்டுள்ளன என காட்டியிருந்த போதிலும் கலவைகள் போடப்பட்ட இடங்களில் அளவைகள் காட்டப்பட்டிருக்காமையால் அவை போடப்பட்டுள்ள வரி என உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பெறுகைகள் திட்டம்

---

ரூபா 277,004,399 இற்கான மூலதனச் செலவுகள் சபை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு
-------------------------------
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 03 வருமான விடயங்களில் நூற்றிற்கு 33 முதல் நூற்றிற்கு 82 வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 94 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
-----------------------------------------------------
பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்